Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை | 200 | உள்ளூர் - 19.07.2026 | ஞாயிறு | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue | 200 | வெளியூர் - 20.07.2026 | திங்கள் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



சுக்கிர பலம் உயர... வாஸ்து வழி!

வருமான வரி தீர்ப்பாயத்தில் 42 பணியிடங்கள்!

சைபர் மோசடிகளுக்கு இ–ஜீரோ எஃப்ஐஆர்!

‘ஜனநாயகன்’ ரிலீஸ்; தள்ளிப்போகும் படங்கள்!


## ஜனாதிபதி திரவுபதி முர்மு 3 நாடுகள் சுற்றுப்பயணம்!



புதுடில்லி, ஜூலை. 19–

மால்டோவா, வடக்கு மாசிடோனியா மற்றும் ருமேனியா ஆகிய 3 நாடுகளுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். டில்லியில் இருந்து ஜனாதிபதி திரவுபதி முர்மு மூன்று நாடுகளுக்கு அரசு முறை பயணமாக புறப்பட்டு சென்றார். பயணத்தின் முதல் கட்டமாக, நாளை (ஜூலை 20) அவர் மால்டோவா நாட்டிற்குச் செல்கிறார்.

அதனைத் தொடர்ந்து, ஜூலை 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் அவர் வடக்கு மாசிடோனியாவிற்குச் செல்கிறார். ஜூலை 23ம் தேதி முதல் ஜூலை 25ம் தேதி வரை ருமேனியாவிற்கு திரவுபதி முர்மு செல்கிறார். இந்திய ஜனாதிபதி ஒருவர் மால்டோவா, வடக்கு மாசிடோனியா, ருமேனியாவிற்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

## நாட்டுப்பற்றுக்கு சட்டப் பாதுகாப்பு!




புதுடெல்லி, ஜூலை, 19–

தேசியப் பாடலான ‘வந்தே மாதரம்’ பாடப்படுவதை வேண்டுமென்றே தடுத்தல், பாடும் நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்துதல் அல்லது பாடலை அவமதித்தல் போன்ற செயல்களுக்கு அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் விதிக்க வழிவகுக்கும் புதிய சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய உள்ளது.

இந்த மசோதா, 1971–ஆம் ஆண்டின் தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்புச் சட்டத்தில் (Prevention of Insults to National Honour Act) திருத்தம் செய்யும் வகையில் கொண்டு வரப்படுகிறது. தற்போது தேசியக் கொடி, தேசிய கீதம் ‘ஜன கண மன’, இந்திய அரசியலமைப்பு ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்பைப் போலவே, தேசியப் பாடலான ‘வந்தே மாதரம்’ பாடலுக்கும் சட்டப்பூர்வ பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது.

புதிய சட்டம் நிறைவேறினால், ‘வந்தே மாதரம்’ பாடப்படுவதை திட்டமிட்டு தடுத்தல், பாடும் நிகழ்ச்சிக்கு இடையூறு விளைவித்தல், அவமதிக்கும் நோக்கில் நடந்து கொள்வது அல்லது பாடலை இழிவுபடுத்தும் செயல்களில் ஈடுபடுவது குற்றமாகக் கருதப்படும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் விதிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்படும்.

இந்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளதாகவும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்த பின்னரே இது சட்டமாக அமலுக்கு வரும் என்றும் அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பாடலின் 150–வது ஆண்டு நினைவை முன்னிட்டு அதன் மரியாதையை சட்டரீதியாக வலுப்படுத்தும் நடவடிக்கையாக இந்த மசோதாவை மத்திய அரசு விளக்குகிறது. அதே நேரத்தில், இந்த சட்டம் குறித்து அரசியல் கட்சிகள் மத்தியில் விவாதமும் கருத்து வேறுபாடும் எழும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## டெல்லியில் அரசியல் ‘மெகா’ மேடை..!




சென்னை, ஜூலை 19:

மதிமுக பொதுச்செயலாளர் வைகோவின் நாடாளுமன்ற உரைகள் அடங்கிய ‘Vaiko in Parliament’ என்ற 6 பாக ஆங்கில நூல் ஆகஸ்ட் 4–ஆம் தேதி டெல்லி கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நூலை வெளியிட, தமிழக முதல்வர் விஜய் முதல் பிரதியை பெற்றுக்கொள்கிறார். இருவரும் ஒரே மேடையில் பங்கேற்பது தேசிய அரசியல் வட்டாரத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் ஜெகதீப் தன்கர், சிபிஎம் பொதுச்செயலாளர் எம்.ஏ. பேபி, சிபிஐ பொதுச்செயலாளர் டி. ராஜா உள்ளிட்ட பல்வேறு தேசிய தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு வெறும் நூல் வெளியீட்டு விழாவாக மட்டுமல்லாமல், தமிழக அரசியலில் புதிய கூட்டணி சமிக்ஞைகள் உருவாகுமா? என்ற அரசியல் விவாதத்தையும் கிளப்பியுள்ளது. குறிப்பாக, த.வெ.க. கூட்டணியில் வி.சி.க. மற்றும் பா.ம.க. இணையும் வாய்ப்புக்கான அரசியல் அச்சாரமாக இந்த சந்திப்பு பார்க்கப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## 10 தேசிய விருதுகளை தமிழ்த் திரையுலகம் வென்றது பெருமைக்குரியது; முதல்வர் விஜய்!



சென்னை, ஜூலை. 19–

பல்வேறு பிரிவுகளில் 10 தேசிய திரைப்பட விருதுகளை வென்று சாதனை படைத்துள்ள தமிழ்த் திரையுலக கலைஞர்களுக்கு முதல்வர் விஜய் வாழ்த்துக்களை தெரிவித்து உள்ளார்.

அவரது அறிக்கை: 2024ம் ஆண்டில் வெளிவந்த திரைப்படங்களுக்கான 72வது தேசிய திரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. அதில், நடிகர் தனுஷ் இயக்கி நடித்துள்ள ‘ராயன்’ திரைப்படத்திற்குச் சிறந்த தமிழ் திரைப்படத்திற்கான விருதும்,

‘கேப்டன் மில்லர்’ திரைப்படத்திற்குத் தேசிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் விழுமியங்களை ஊக்குவி க்கும் சிறந்த திரைப்படத்தி ற்கான விருது மற்றும் அப்படத்தில் நடித்த தனுஷ்க்குச் சிறப்புப் பிரிவில் சிறந்த நடிகருக்கான விருதும்,

‘அமரன்’ திரைப்படத்திற்காக ராஜ்குமார் பெரியசாமிக்குச் சிறந்த இயக்குநருக்கான விருது, ஆர்.கலைவாணனுக்குச் சிறந்த படத்தொகுப்புக்கான விருது மற்றும் ஜி.வி.பிரகாஷ் குமாருக்குச் சிறந்த பின்னணி இசைக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ‘மகாராஜா’ திரைப்படத்திற்காக அனல் அரசுக்குச் சிறந்த சண்டைப் பயிற்சிக்கான விருது மற்றும் அப்படத்தில் நடித்த சாச்சனா நமிதாஸ்க்குச் சிறந்த துணை நடிகை விருதும்,

‘மெய்யழகன்’ திரைப்படத்திற்காக சுரேனுக்குச் சிறப்புப் பிரிவில் சிறந்த ஒலிகலவைக்கான விருதும், ‘ப்ளூ’ குறும்படத்திற்காக டி. எஸ். ஹரிஹா சிறந்த ஒலி வடிவமைப்புக்கான விருதும் சுதனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

10 தேசிய திரைப்பட விருதுகளைத் தமிழ்த் திரையுலகம் வென்றுள்ளது பெருமைக்குரியது. வருங்காலங்களில் தமிழ்த் திரையுலகம் மேலும் பல விருதுகளைப் பெற்றிடவும் வாழ்த்துக்கள். இவ்வாறு முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

## டெல்லி கொதிக்கிறது...

# பரபரப்பில்... கூடுகிறது பாராளுமன்றம்!

## முக்கிய மசோதாக்கள் களத்தில்!!




புதுடெல்லி, ஜூலை. 19–

மழைக்காலக் கூட்டத்தொடரின் முதல் அமர்வுக்காக பாராளுமன்றம் நாளை (ஜூலை 20) கூடுகிறது. அரசியல் ரீதியாக பரபரப்பான சூழலில் தொடங்கும் இந்த கூட்டத்தொடரில், மத்திய அரசு பல முக்கிய மசோதாக்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் ‘வந்தே மாதரம்’ பாடலை அவமதிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டத் திருத்தம், தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா, புவிசார் பாரம்பரிய (Geoheritage) பாதுகாப்பு மசோதா, சுரங்கம் மற்றும் கனிமங்கள் தொடர்பான திருத்த மசோதா உள்ளிட்ட முக்கிய சட்டங்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

மறுபுறம், மணிப்பூர் விவகாரம், தேர்தல் முறைகேடு குற்றச்சாட்டுகள், விலைவாசி உயர்வு, விவசாயிகள் பிரச்சினை மற்றும் பிற அரசியல் விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன. இதனால் கூட்டத்தொடரின் முதல் நாளிலிருந்தே காரசாரமான விவாதங்களும் அமளியும் அரங்கேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. முக்கிய சட்ட மசோ தாக்களும், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பும் ஒரே நேரத்தில் மோதவுள்ளதால், இந்த மழைக்கால பாராளுமன்றக் கூட்டத்தொடர் தேசிய அரசியலில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

## டெல்லியில் அனைத்து கட்சி கூட்டம்- திமுக வெளிநடப்பு!



புதுடெல்லி, ஜூலை. 19–

மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், நாடாளுமன்ற வளாகத்தில் மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் இன்று தொடங்கியது.

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜிக்கு எதிராக திரும்பி உள்ள அதிருப்தி எம்.பி.க்கள் 20 பேர் இந்த கூட்டத்தில் பங்கேற்றதைக் கண்டித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் பல்வேறு விஷயங்கள் பற்றி பேச உள்ளனர். குறிப்பாக, ஜந்தர்மந்தரில் இருந்து சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக்கை வெளியேற்றிய விவகாரம் பற்றி அனைத்து எதிர்கட்சியினரும் பேச இருக்கிறார்கள்.

மேலும், அயோத்தி ராமர் கோவில் நன்கொடை கையாடல் செய்யப்பட்டதாக கூறப்படும் விவகாரமும் இன்றைய கூட்டத்தில் விஸ்வரூபம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவிலேயே தங்கம்? பெரிய திருப்பம்!




அமராவதி, ஜூலை 19:

இந்தியா அதிகளவில் தங்கத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வரும் நிலையில், ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீ சத்ய சாய் மாவட்டத்தில் உள்ள ராமகிரி தங்கச் சுரங்கம் சுமார் 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை ஆந்திர அரசு தீவிரமாக மேற்கொண்டுள்ளது.

20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட இந்தச் சுரங்கம், பின்னர் பாரத் கோல்ட் மைன்ஸ் லிமிடெட் (BGML) நிறுவனத்தால் 1982 முதல் 2001 வரை இயக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் 2001–ஆம் ஆண்டு சுரங்கப் பணிகள் நிறுத்தப்பட்டன. இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் தகவலின்படி, ராமகிரி பகுதியில் சுமார் 11.4 லட்சம் டன் தாதுப்பொருள் இருப்பதாகவும், அதிலிருந்து சுமார் 9.1 டன் தங்கம் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த தங்க மண்டலம் சுமார் 150 கி.மீ. வரை பரவி இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

நவீன சுரங்கத் தொழில்நுட்பத்தின் உதவியுடன், முன்பு லாபமற்றதாகக் கருதப்பட்ட குறைந்த தரத் தாதுக்களிலிருந்தும் தற்போது தங்கம் பிரித்தெடுக்க முடியும் என்பதால், இந்தத் திட்டம் வணிக ரீதியாக வெற்றி பெறும் என அரசு நம்புகிறது. முந்தைய சுரங்கப் பணிகளில் வெளியேற்றப்பட்ட கழிவுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் தங்கம் மீட்க முடியும் என்றும் ஆரம்ப ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதற்காக ராமகிரி வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள சுரங்கங்களை தனியார் நிறுவனங்களுக்கு ஏலம் விட ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது. அமைச்சர் கொல்லு ரவீந்திரா நேரில் ஆய்வு மேற்கொண்டதும் திட்டத்திற்கு மேலும் வேகம் சேர்த்துள்ளது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டால், இந்தியாவின் தங்க இறக்குமதி சார்பு ஓரளவு குறைவதுடன், உள்நாட்டு நகைத் தொழிலுக்கும் ஆதரவாக அமையும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 19.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 03-ம் தேதி

## முதல் பட்ஜெட்: வாக்குறுதிகள் நிறைவேறுமா?



தமிழகத்தில் புதிய ஆட்சி அமைந்த பிறகு தாக்கல் செய்யப்பட உள்ள முதல் முழுநீள பட்ஜெட்டை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஒரு அரசின் முதல் பட்ஜெட் என்பது வெறும் வரவுசெலவுக் கணக்கு மட்டுமல்ல; அந்த அரசின் நோக்கம், முன்னுரிமை மற்றும் நிர்வாக திசையை வெளிப்படுத்தும் ஆவணமாகும்.

முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு, பல கட்ட ஆலோசனைகளுக்குப் பிறகு ஆகஸ்ட் முதல் வாரத்தில் தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்யத் தயாராகியுள்ளது. தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதில் எந்த அளவுக்கு இடம்பெறுகின்றன என்பதே மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது.

குறிப்பாக பெண்களுக்கு மாதம் ரூ.2,500 உதவித்தொகை, அனைத்து பேருந்துகளிலும் இலவச பயணம், திருமண உதவித் திட்டங்கள் போன்ற அறிவிப்புகள் நடைமுறைக்கு வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேநேரத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் முதலீடுகளை ஈர்ப்பது, விவசாயம், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற துறைகளுக்கும் போதிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

அரசு ஏற்கனவே தமிழகத்தின் நிதிநிலையை விளக்கும் வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது. எனவே, மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிதி ஒழுங்கையும் சமநிலைப்படுத்துவது இந்த பட்ஜெட்டின் மிகப்பெரிய சவாலாக இருக்கும். மக்கள் நலத் திட்டங்களை அறிவிப்பதோடு, அவற்றை செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரத்தையும் தெளிவாகக் கூற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

முதல் பட்ஜெட் அரசின் செயல்திறனை மதிப்பிடும் அளவுகோலாக அமையும். எனவே, தேர்தல் வாக்குறுதிகளுக்கும் மாநிலத்தின் பொருளாதார நிலைக்கும் இடையே சமநிலையைப் பேணும் வகையில், நீண்டகால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நடைமுறைசார்ந்த பட்ஜெட்டை மக்கள் எதிர்பார்க்கின்றனர். அது தமிழகத்தின் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான வளர்ச்சிப் பாதையை தீர்மானிக்கும் முக்கிய ஆவணமாக அமைய வேண்டும்.

# டெல்லியில் மீண்டும் தொடங்கும் பருவமழை: இமயமலை மாநிலங்களில் கனமழை எச்சரிக்கை!



புதுடெல்லி, ஜூலை. 19–

கடந்த சில வாரங்களாக கடுமையான வெயில் மற்றும் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் மட்டுமே பெய்த மழையால் தவித்து வந்த வட இந்தியாவில், தென்மேற்குப் பருவமழை மீண்டும் தீவிர மடையத் தொடங்கியுள்ளது.

இன்று முதல் தலைநகர் டெல்லியில் பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும், அதே நேரத்தில் இமயமலைப் பகுதிகளில் உள்ள மாநிலங்களுக்கு அதிதீவிர மழைக்கான எச்சரிக்கையையும் இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

வானிலை ஆய்வாளர்களின் கூற்றுப்படி, அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா ஆகிய இரு பகுதிகளில் இருந்தும் வீசும் பலத்த ஈரப்பதம் கொண்ட காற்று மற்றும் பருவமழைக் காற்று வட இந்திய சமவெளிப் பகுதியை நோக்கி நகர்வது ஆகிய காரணங்களால் இந்த மழைப்பொழிவு தீவிரமடைந்துள்ளது. கடந்த சில வாரங்களாகப் போதிய மழையின்றி வறண்டு காணப்பட்ட டெல்லி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் இன்று முதல் தொடர் மழைச் சுழற்சி ஆரம்பமாகிறது.

இன்று தொடங்கும் இந்த பரவலான மழைப்பொழிவு, அடுத்த 48 முதல் 72 மணி நேரத்தில் அதன் உச்சத்தை எட்டும் என்று வானிலை மாதிரிகள் காட்டுகின்றன. இந்த மழையினால் வெப்பம் கணிசமாகக் குறைந்து குளிர்ந்த வானிலை நிலவும். மேலும், டெல்லியின் காற்றில் உள்ள மாசுகள் சுத்திகரிக்கப்பட்டு காற்றின் தரம் மேம்படும். இருப்பினும், திடீர் கனமழையால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நகராட்சி நிர்வாகம் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

சமவெளிப் பகுதிகளில் மழை நிம்மதியைத் தந்தாலும், இமயமலைப் பகுதிகளில் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. வட மற்றும் கிழக்கு இந்தியாவின் பல மலைப்பகுதிகளுக்கு IMD மிகக் கனமழை எச்சரிக்கையை நீட்டித்துள்ளது.

பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மலை மாநிலங்களில் உள்ள உள்ளூர் நிர்வாகங்கள், நதிக்கரைகள் மற்றும் நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளுக்கு அத்தியாவசியத் தேவையின்றி மக்கள் பயணம் செய்ய வேண்டாம் என்று கடுமையான எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. இமாச்சலப் பிரதேசம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் தற்காலிக உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதால், உள்ளூர் பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதே சமயம், வட இந்திய சமவெளிப் பகுதிகளில் உள்ள உள்ளூர் அமைப்புகள், மழைநீர் தேங்குவதைத் தடுக்க வடிகால் அமைப்புகளைச் சீரமைக்க உத்தரவிடப்பட்டுள்ளனர்.





## சுக்கிர பலம் உயர... வாஸ்து சொல்லும் எளிய வழி!

ஜோதிடம் மற்றும் வாஸ்து நம்பிக்கைகளின்படி, சுக்கிரன் செல்வம், வசதி, அழகு, காதல் மற்றும் திருமண வாழ்க்கைக்கு முக்கியமான கிரகமாகக் கருதப்படுகிறார். சுக்கிரனின் நல்ல பலனை அதிகரிக்க வீட்டில் சில செடிகளை வளர்ப்பது மங்களகரமானதாக நம்பப்படுகிறது.

வாஸ்து சாஸ்திரப்படி, தென்கிழக்கு திசையில் ரோஜா, துளசி, மாதுளை மற்றும் செம்பருத்தி செடிகளை வளர்ப்பது சுக்கிரனின் அருளை அதிகரிக்கும் என கூறப்படுகிறது. குறிப்பாக ரோஜா செடியை வளர்த்து, அதன் மலர்களை இறைவனுக்கு சமர்ப்பித்து வழிபடுவது மகாலட்சுமியின் அருளைப் பெற உதவும் என்ற நம்பிக்கை உள்ளது.

துளசி செடி வீட்டில் செழிப்பு, அமைதி மற்றும் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும் செடியாகக் கருதப்படுகிறது. அதை முறையாக பராமரித்து வழிபடுவது குடும்பத்தில் நல்லிணக்கம் ஏற்பட உதவும் என ஜோதிட நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. அதேபோல், மாதுளை மற்றும் செம்பருத்தி செடிகளும் நிதிநிலை மேம்படவும், மன அமைதி கிடைக்கவும் உதவுவதாக வாஸ்து கருத்துகள் கூறுகின்றன.

வீட்டில் தூய்மையான சூழலை பராமரித்து, செடிகளை ஆரோக்கியமாக வளர்ப்பது இயற்கைச் சூழலுக்கும் நன்மை தரும். இருப்பினும், இவை ஜோதிடம் மற்றும் வாஸ்து சார்ந்த பாரம்பரிய நம்பிக்கைகள் மட்டுமே. வாழ்க்கையில் முக்கிய முடிவுகள் அல்லது உடல்நலப் பிரச்சினைகள் தொடர்பாக நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

# மாணவர்களின் ஆதார், சாதி விவரங்களை ஆன்லைனில் பதிவு செய்ய உத்தரவு!-பள்ளிக் கல்வித்துறை!




சென்னை, ஜூலை. 19–

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களின் சாதிச் சான்றிதழ் விவரங்களை, பள்ளிக் கல்வித்துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆன்லைன் மூலமாகப் பதிவு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**EMIS இணையதளத்தில் பதிவு:**

தமிழக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மட்டுமின்றி, தனியார் பள்ளிகளிலும் பயிலும் அனைத்து மாணவர்களின் சமூகப் பிரிவு மற்றும் சாதி சான்றிதழ் விவரங்களை கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு இணையதளத்தில் துல்லியமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**ஆவணங்கள் சரிபார்ப்பு:**

மாணவர்கள் சேர்க்கையின் போது சமர்ப்பித்த சாதிச் சான்றிதழ்களைக் கொண்டு, இந்த விவரங்கள் ஆன்லைனில் உள்ளீடு செய்யப்பட வேண்டும். தவறுகள் ஏதேனும் இருந்தால், அவற்றை உடனடியாகத் திருத்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**நலத்திட்டங்கள் தடையின்றி கிடைக்க:**

மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இலவச மிதிவண்டிகள், மடிக்கணினிகள் மற்றும் இதர அரசு நலத்திட்டங்கள் தகுதியான மாணவர்களுக்குச் சரியாகச் சென்றடைவதை உறுதி செய்யவே இந்த ஆன்லைன் பதிவு முறை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

**டிஜிட்டல் மயமாக்கல்:**

வருவாய்த் துறை மூலம் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ் மற்றும் இதர விவரங்களை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கி, பள்ளிப் பதிவேடுகளுடன் இணைப்பதன் மூலம் எதிர்காலத்தில் மாணவர்கள் மேல் படிப்பிற்கு விண்ணப்பிக்கும் போது ஏற்படும் தாமதங்கள் தவிர்க்கப்படும்.

**பின்னணி:**

சமீபத்தில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள ஸ்மார்ட் அடையாள அட்டைகளில் சாதி விவரங்கள் இடம்பெறப் போவதாகச் சில தகவல்கள் வெளியாகி விவாதத்தைக் கிளப்பிய நிலையில், "மாணவர்களின் அடையாள அட்டைகளில் எக்காரணம் கொண்டும் சாதி விவரங்கள் அச்சிடப்படாது. அது மாணவர்களிடையே பாகுபாட்டை உருவாக்கும்" என்று தமிழக அமைச்சர்கள் ஏற்கனவே திட்டவட்டமாக மறுத்து, அது வெறும் தரவு நெறிப்படுத்துதல் மட்டுமே என விளக்கியிருந்தனர். தற்போது கல்வித்துறையின் உள்நிர்வாகப் பயன்பாட்டிற்காகவும், அரசு நலத்திட்டங்களின் வெளிப்படைத்தன்மைக்காகவும் மட்டுமே இந்த ஆன்லைன் சாதி விவரப் பதிவுப் பணிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

## மும்பை- ஆமதாபாத் புல்லட் ரெயில் திட்டம்: கடலுக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி தொடக்கம்!



மும்பை, ஜூலை. 19–

மும்பை ஆமதாபாத் இடையே புல்லட் ரெயில் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக மும்பை பி.கே.சி. முதல் நவிமும்பையில் உள்ள கன்சோலி சாவ்லி பகுதி வரை 21 கி.மீ.க்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. இதில் 5 கி.மீ.க்கு சுரங்கம் தோண்டும் பணி முடிந்து உள்ளது. கடந்த 5–ந் தேதி விக்ரோலி பி.கே.சி. இடையே 6 கி.மீ.க்கு சுரங்கம் தோண்டும் பணி தொடங்கப்பட்டது.

இந்தநிலையில் சாவ்லி விக்ரோலி இடையே 10 கி.மீ. சுரங்கம் தோண்டும் 2–வது கட்டப்பணிகள் நேற்று தொடங்கியது. இதில் 7 கி.மீ. சுரங்கப்பாதை தானேயில் கடலுக்கு அடியில் வரு கிறது.

இந்தியாவில் ரெயில்வே வரலாற்றில் கடலுக்கு கீழ் சுரங்கப்பாதை அமைப்பது இதுவே முதல் முறையாகும்.

சுரங்கப்பாதை தோண்டும் பணியில் ஈடுபடும் ராட்சத எந்திரத்தின் முன் முனைப்பகுதி 13.6 மீட் டர் விட்டம் கொண்டதாகும். இது 4 அடுக்குமாடி கட்டிட உயரத்துக்கு சமமானதாகும். 96 மீட்டர் நீளமுள்ள இந்த எந்திரம் 3 ஆயிரத்து 200 டன், அதாவது 500 ஆசிய யானைகளின் எடைக்கு சமமானது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## அமைச்சர் பிரபு வீடு, அலுவலகத்துக்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு!





காரைக்குடி, ஜூலை. 19–

புதிய கல்குவாரி அனுமதிக்கு எதிர்ப்பு தெரிவித்து முற்றுகை போராட்டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து சிவகங்கையில் உள்ள அமைச்சர் பிரபுவின் வீடு, அலுவலகத்துக்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், குளவாய்பட்டியில் தனியார் குவாரிக்கு அனுமதி வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் காரைக்குடியில் உள்ள அமைச்சர் டி.கே. பிரபுவின் வீட்டை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்தனர். இதையடுத்து, காரைக்குடி முடியரசன் சாலையில் உள்ள அமைச்சரின் வீடு, அலுவலகங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க மாவட்ட காவல் துறை ஏற்பாடு செய்தது.

மேலும் திருமயம் பகுதியிலிருந்து காரைக்குடிக்கு போராட்டக்காரர்கள் வருவதை தடுக்கும் வகையில் நேமத்தான்பட்டி காவல் சோதனைச் சாவடியில் 50 போலீஸார் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

இதில் காவல் ஆய்வாளர் தலைமையில் 10–க்கும் மேற்பட்ட உதவி ஆய்வாளர்கள், 50–க்கும் மேற்பட்ட காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக போராட்டக்காரர்கள் காரைக்குடி வருவதை போலீஸார் தடுத்து நிறுத்தினர்.

# சைபர் மோசடிகளுக்கு இ-ஜீரோ எஃப்ஐஆர்!




புதுடெல்லி, ஜூலை. 19–

சைபர் நிதி மோசடிகளில் விரைவான நடவடிக்கை எடுக்கும் வகையில், இ–ஜீரோ முதல் தகவல் அறிக்கையை தமிழக சைபர் குற்றப்பிரிவு அறிமுகம் செய்துள்ளது. இது தொடர்பாக, சைபர் குற்றப்பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தேசிய சைபர் குற்றப்பிரிவு இலவச தொலைப்பேசி எண் 1930–க்கு பொதுமக்கள் அளிக்கும் சைபர் நிதி தொடர்பான புகார்களுக்கு 'இ–ஜீரோ எஃப்ஐஆர்' திட்டத்தை தமிழக அரசு அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி, 1930 இலவச தொலைப்பேசி எண் மூலம் பெறப்படும் ரூ.1 லட்சத்துக்கு மேற்பட்ட நிதி மோசடி புகார்கள், சிசிடிஎன்எஸ் ஒருங்கிணைக்கப்படுகிறது. பின்னர், பொதுமக்களின் புகாரின்பேரில், 'இ–ஜீரோ எஃப்ஐஆர்' பதிவு செய்யப்படும்.

விரைந்து நடவடிக்கை: இதன்மூலம் பொதுமக்கள் ஒரே புகாரை மீண்டும் மீண்டும் பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. இதனால், வழக்குப் பதிவு, உரிய காவல் நிலையத்துக்கு மின்னணு பரிமாற்றம், வழக்கின் விசாரணை ஆகியவை விரைவாக நடைபெறும். அதோடு முக்கியமான நேரத்தில் மோசடி செய்யப்பட்ட வங்கிக் கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொதுமக்களிடமிருந்து அபகரிக்கப்படும் டிஜிட்டல் ஆதாரங்கள், சான்றிதழ் கையகப்படுத்தப்படும்.

முடக்கப்பட்ட பணம், பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் விரைவாக மீண்டும் ஒப்படைக்கப்படும். அதேவேளை, 'இ–ஜீரோ எஃப்ஐஆர்' பதிவு செய்யப்பட்டதும், பாதிக்கப்பட்ட நபருக்கு அதுகுறித்த தகவல் தெரிவிக்கப்படும். பின்னர், பாதிக்கப்பட்ட நபர் 3 நாள்களுக்குள் குறிப்பிட்ட சைபர் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகும்படி கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். இ–ஜீரோ எஃப்ஐஆர் மின்னணு முறையில் சம்பந்தப்பட்ட சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்துக்கு விசாரணைக்கு அனுப்பப்படும். அங்கு, போலீ ஸார் விசாரணைக்கு பின்னர் இ–ஜீரோ எஃப்ஐஆர் அடிப்படையில், வழக்கமான எஃப்ஐஆர் பதிவு செய்யப்படும்.

குற்றப்பதிவு எண் வழங்கப்படாது: பிஎன்எஸ்எஸ் சட்ட விதிகளின் பாதிக்கப்பட்ட நபர், தனது புகாரை உறுதிப்படுத்தி, வழக்கமான எஃப்ஐஆரை பதிவு செய்ய 3 நாள்களுக்குள் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்துக்கு செல்ல வேண்டும். பிஎன்எஸ்எஸ் சட்டப் பிரிவு 173–இன் கீழ் கைது செய்யக் கூடிய குற்றங்கள் அனைத்தையும் இணையதளம் வாயிலாக புகாராக பெற்று, அதிகார வரம்பைப் பொருள்படுத்தாமல் இ–ஜீரோ எஃப்ஐஆர் பதிவு செய்ய அதிகாரம் வழங்குகிறது.

இதன் விளைவாக சட்ட நடவடிக்கை விரைவாகும். ஜீரோ எஃப்ஐஆரில் காவல் நிலையம், குற்ற பதிவு எண் வழங்கப்படாது. ஆனால், சாதாரண எஃப்ஐஆரில் குற்றப்பதிவு எண் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குற்றம் எங்கு நடந்திருந்தாலும், அதை எந்தக் காவல் நிலையத்திலும் பதிவு செய்யக்கூடிய முதல் தகவல் அறிக்கையே, 'ஜீரோ எஃப்ஐஆர்' ஆகும். இதில் வழக்கமான முதல் தகவல் அறிக்கைக்குரிய குற்றப்பதிவு எண் வழங்கப்படாமல் '0' எனப் பதிவு செய்யப்படுகிறது. இதனால் இது 'ஜீரோ எஃப்ஐஆர்' என அழைக்கப்படுகிறது.

முதல்கட்ட விசாரணைக்குப் பின்னர் இந்த 'ஜீரோ எஃப்ஐஆர்', இது விசாரணைக்காக சம்பந்தப்பட்ட காவல் நிலையத்துக்கு மாற்றப்பட்டு, காவல் நிலையத்தில் குற்றப்பதிவு எண் வழங்கப்படும். இத்திட்டம், கடந்த 2012 நிர்பயா சம்பவத்தின் விளைவாக அமைக்கப்பட்ட நீதிபதி வர்மா கமிட்டியின் பரிந்துரையின்பேரில் கொண்டுவரப்பட்டது. அவசர வழக்குகளில் 'எங்கள் எல்லைக்குட்பட்டது அல்ல' என்று காவல் துறையினர் வழக்குப் பதியாமல் இழுத்தடிப்பதைத் தடுக்கவும், வழக்குகளில் விரைந்து நடவடிக்கை எடுக்கவும் 'ஜீரோ எஃப்ஐஆர்' திட்டம் பயன்படுத்தப்படுகிறது.

## ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் பட்டம் வென்றார் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து!




ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், 'சூப்பர் 750' அந்தஸ்து பெற்ற ஜப்பான் ஓபன் பாட்மின்டன் தொடர் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் 'நம்பர்–10' இந்தியாவின் சிந்து 31, டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் கைப்பற்றிய, உலகின் 'நம்பர்–4' சீனாவின் சென் யுபெய் 28, மோதினர். முதல் செட்டை 21–19 எனக் கைப்பற்றிய சிந்து, இரண்டாவது செட்டில் 15–10 என முன்னிலையில் இருந்த போது, காயத்தால் சீன வீராங்கனை பாதியில் விலகினார். இதனையடுத்து சிந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, பைனலுக்கு தகுதி பெற்றார்.

பைனலில் சிந்து, உலகின் 'நம்பர்–3' ஜப்பானின் அகானே யமாகுச்சியை சந்தித்தார். ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய பி.வி.சிந்து 21–17, 21–17 என்ற செட் கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் பெற்று அசத்தினார். ஒலிம்பிக்கில் இரு முறை பதக்கம் பெற்றவரான பிவி சிந்து கடந்த 2 ஆண்டாக சர்வதேச பட்டம் எதுவும் வெல்லாத நிலையில், தற்போது சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

## அமர்நாத் யாத்திரை தற்காலிக நிறுத்தம்!


மோசமான வானிலை காரணமாக அமர்நாத் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பக்தர்களின் பாதுகாப்பு கருதி யாத்திரை நிறுத்தப்படுகிறது. அதிகாரிகளுடன் ஒத்துழைத்து அடுத்த உத்தரவு வரும் வரை பக்தர்கள் யாத்திரை மேற்கொள்ள வேண்டாம்.

யாத்திரை எப்போது தொடங்கும் என்பதை வானிலை குறித்த விரிவான மதிப்பீடு, வழித்தடத்தில் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு உரிய காலத்தில் அறிவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேபோல், ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் மாதா வைஷ்ணவி தேவி கோவிலுக்கான யாத்திரையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல்!



தென்காசி, ஜூலை. 19–

(ஜூலை. 19) ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் காலை முதலே மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிந்தது. வெளியூர்களில் இருந்து கார், வேன், ஆட்டோ, பஸ் உள்ளிட்ட வாகனங்களில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் குடும்பமாக வருகை புரிந்தனர். அவர்கள் அருவிகளில் உற்சாகமாக குளித்துவிட்டு குற்றாலத்தில் உள்ள பூங்கா பகுதி மற்றும் அருவி கரைகளுக்கு செல்லும் சாலை ஓரப் பகுதிகளில் உள்ள மர நிழல்களில் அமர்ந்து குடும்பமாக உணவு உண்டு மகிழ்ந்து நேரத்தை செலவிட்டனர்.

மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை இல்லை. இதனால் அருவிகளுக்கு வரும் நீரின் அளவும் கனிசமாக குறைந்துள்ளது. எனினும், சுற்றுலா பயணிகள் குறைவாக வரும் தண்ணீரில் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்து வருகின்றனர். சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளதால் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஒரு துண்டு தேங்காய்... உடல், சருமம், முடிக்கு பலன்!



தேங்காய் நமது அன்றாட உணவில் முக்கிய இடம் வகிக்கும் இயற்கை உணவுப் பொருளாகும். இதில் ஆரோக்கியமான கொழுப்புகள், புரதம் மற்றும் உடலுக்குத் தேவையான பல்வேறு ஊட்டச்சத்துகள் உள்ளன. எனவே, அளவோடு தேங்காயை உணவில் சேர்த்துக்கொள்வது உடலுக்கு தேவையான சத்துகளை வழங்க உதவுகிறது.

தேங்காயில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை சீராக வைத்திருக்க உதவக்கூடும். மேலும், இதில் உள்ள சத்துகள் சருமத்தின் ஈரப்பதத்தை பராமரிக்க உதவுவதால், வறட்சி குறைந்து சருமம் பொலிவாக இருக்க வாய்ப்புள்ளது. தொடர்ந்து அளவோடு தேங்காய் சாப்பிடுவது தோல் ஆரோக்கியத்திற்கும் பயனளிக்கலாம்.


தலைமுடி பராமரிப்பிலும் தேங்காய்க்கு முக்கிய பங்கு உள்ளது. இதில் உள்ள புரதம் மற்றும் ஊட்டச்சத்துகள் முடியை வலுப்படுத்தவும், முடி உதிர்வைக் குறைக்கவும், அடர்த்தியைப் பராமரிக்கவும் உதவக்கூடும். ஆரோக்கியமான உணவுப் பழக்கத்துடன் தேங்காயை சேர்த்துக்கொள்வது தலைமுடி வளர்ச்சிக்கும் ஆதரவாக இருக்கும்.

இருப்பினும், தேங்காயை எந்தவொரு நோய்க்கும் மருத்துவ சிகிச்சைக்கு மாற்றாக கருதக்கூடாது. குறிப்பாக வலிப்பு நோய், சிறுநீரகத் தொற்று உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகளுக்கு மருத்துவரின் ஆலோசனையின்றி இதை சிகிச்சையாக பயன்படுத்துவது சரியானது அல்ல. சமச்சீர் உணவின் ஒரு பகுதியாக அளவோடு தேங்காயை சேர்த்துக்கொள்வது உடல், சருமம் மற்றும் தலைமுடி ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். உடல்நலக் குறைபாடுகள் உள்ளவர்கள் உணவுமுறையில் மாற்றம் செய்வதற்கு முன் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

## தவெகவில் இருந்து திமுகவில் இணைந்த இளைஞர்கள்!



திருப்பூர், ஜூலை 19–
திருப்பூர் மாநகராட்சி 36வது வார்டில் மாமன்ற உறுப்பினர் கல்வி நிலைக்குழு தலைவர் திவாகரன் தலைமையில், கலை கலாச்சார பாரம்பரிய அணியில் மாவட்ட பொறுப்பாளர்கள் தமிழரசன், மோகன், விக்கி, இளவரசன் ஆகியோர் ஏற்பாட்டில் த.வெ.க வில் இருந்து விலகி 70–க்கும் மேற்பட்ட. நிர்வாகிகள், இளைஞர்கள் மத்திய மாவட்ட கழக செயலாளர் தெற்கு தொகுதியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர் உடன் மாநகர செயலாளர் டி கே டி நாகராஜன் . மாவட்ட துணைச் செயலாளர் டிஜிட்டல் சேகர்.பகுதி கழகச் செயலாளர்கள் பிஆர்.செந்தில்குமார். ஈஸ்வரமூர்த்தி. தம்பி குமாரசாமி. தெற்கு மாநகர துணைச் செயலாளர் மகாலட்சுமி. வார்டு செயலாளர்கள் பி எஸ் பாண்டியன். தினேஷ் குமார்.கழக பேச்சாளர் ரஜினி செந்தில் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## சினிமா துளிகள்..!

## ‘ஜனநாயகன்’ ரிலீஸ் எதிரொலி... தள்ளிப்போகும் படங்கள்!



முதல்வர் விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ திரைப்படம் ஜூலை 23 அன்று உலகம் முழுவதும் வெளியாக உள்ளதால், அதே தேதியில் வெளியாக இருந்த பல திரைப்படங்கள் தங்களது ரிலீஸ் தேதியை மாற்றியுள்ளன.

ஜி.வி.பிரகாஷ் நடித்த ‘இம்மார்டல்’ திரைப்படம் ஜூலை 23–ல் இருந்து செப்டம்பர் 4–க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஜி.வி.பிரகாஷ் சமூக வலைதளத்தில் ரசிகர்களிடம் புதிய தேதியை அறிவித்துள்ளார்.

இதேபோல், லோகேஷ் கனகராஜ் நடிகராக அறிமுகமாகும் ‘டிசி’ திரைப்படமும் ஜூலை 31–ல் இருந்து ஆகஸ்ட் 7–க்கு மாற்றப்பட்டுள்ளது.

மேலும், ஜேசன் சஞ்சய் இயக்கும் ‘சிக்மா’ திரைப்படத்தின் வெளியீடும் தள்ளிப்போகலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

# முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மனைவி சென்னம்மா மறைவு!



புதுடெல்லி, ஜூலை. 19–
முன்னாள் பிரதமர் எச்.டி. தேவகவுடாவின் மனைவி சென்னம்மா (89) வயது முதிர்வு காரணமாக உடல்நலக் குறைவால் பெங்களூரு மணிப்பால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மாரடைப்பால் காலமானார். 1954–ம் ஆண்டு தேவகவுடாவை திருமணம் செய்துகொண்ட இவர்களுக்கு 4 மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளனர். சென்னம்மாவின் இறுதிச்சடங்கு இன்று ஹரதனஹள்ளியில் நடைபெறுகிறது.

# அரசுப் பள்ளிகளில் கலைத் திருவிழா போட்டிகள்!



சென்னை, ஜூலை. 19–
அரசு மற்றும் அரசு உதவிப் பள்ளி மாணவர்களுக்கான கலைத் திருவிழா போட்டிகள் ஜூலை 23 முதல் அக்டோபர் 28 வரை நடைபெறுகின்றன.

மாணவர்கள் 5 வயது/ வகுப்பு பிரிவுகளாக போட்டி களில் பங்கேற்கலாம். கதை கூறுதல், ஓவியம், பேச்சு, திருக்குறள், இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய இசைக்கருவிகள் உள்ளிட்ட பல்வேறு கலைப்போட்டிகள் நடத்தப்படு கின்றன. பள்ளி, குறுவட்டம், வட்டா ரம், மாவட்டம், மாநிலம் என 5 கட்டங்களாக போட்டிகள் நடைபெறும். மாநில அளவில் வெற்றிபெறும் மாண வர்களுக்கு ‘கலை யரசன்’, ‘கலையரசி’ விரு துகள் வழங்கப்படும். முதல் 25 மாணவர்களுக்கு வெளி நாட்டு கல்விச் சுற்றுலா வாய்ப்பும் வழங்கப்படும்.

# சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு இரண்டாம் கட்ட தேர்வு முடிவுகள் வெளியீடு!




டெல்லி, ஜூலை. 19–
சிபிஎஸ்இ 2026–ஆம் ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு இரண்டாம் கட்ட தேர்வு முடிவுகளை வெளி யிட்டுள்ளது. மாணவர்கள் results.digilocker.gov.in என்ற இணையதள முகவரி யில் உள்ள DigiLocker முடிவுகள் இணையதளம் (Portal) வாயிலாகத் தங்கள் முடிவுகளைப் பார்க்கலாம். முதன்மை வாரியத் தேர்வு 2026 பிப்ரவரி 17 முதல் மார்ச் 11 வரையிலும், அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வாரியத் தேர்வு 2026 மே 15 முதல் மே 21 வரையிலும் நடத்தப்பட்டன.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) 2026–ஆம் ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு இரண்டாம் கட்ட வாரியத் தேர்வு முடி வுகளை வெளியிட்டுள்ளது. மாணவர்கள் results.dig–ilocker.gov.in என்ற இணையதள முகவரியில் உள்ள DigiLocker முடிவுகள் இணையதளம் (Portal) வாயிலாகத் தங்கள் முடிவுகளைப் பார்க்கலாம்.

# கீழக்கரை ரோட்டரி சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா!




ராமநாதபுரம், ஜூலை. 19–
ராமநாதபுரம் மாவட்டம் கீழக்க ரை தனியார் மஹாலில் ரோட்டரி சங்கத்தின் 20262027–ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடைபெற்றது.

இவ்வாண்டிற்கான சங்கத் தலைவராக ரொட்டேரியன் சித்திரவேலு, செயலாளராக ரொட்டேரியன் சபீர், பொருளா ளராக ரொட்டேரியன் சுப்ரமணி யன் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். விழாவிற்கு ரோட்டரி மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் மரு. எபினேஷ் பென்சம் தலைமை வகித்து, புதிய நிர்வாகிகளுக்கு பதவிப் பிரமா ணம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக ராமநாதபுரம் ராஜன் மருத்துவமனை நிறுவனர் ரொட்டேரியன் மரு. ஜோசப் ராஜன், ராம்நாடு ரோட்டரி சங்கத்தின் முன்னாள் துணை மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் சண்முகராஜேஸ்வரன், ஆகியோர் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர். சங்கத்தின் பட்டயத் தலைவர் ரொட்டேரியன் அலாவுதீன் வரவேற்புரை யாற்றி னார். முன்னாள் தலைவர் சிவகா ர்த்திக், முன்னாள் செயலாளர் அந்தோணி சதீஸ், முன்னாள் துணை மாவட்ட ஆளுநர் சுந்தரம் ஆகியோர் கடந்தாண்டு மேற்கொள்ளப்பட்ட சேவைப் பணிகள்குறித்து ஆண்டறிக்கையை சமர்ப்பித்தனர். விழாவில் கீழக்கரை ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான ரொட்டேரியன்கள் கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர். முடிவில், சங்கத்தின் செயலாளர் ரொட்டேரியன் ஹாஜி சபீர் நன்றியுரை வழங்கினார்.

# ரூ.96.09 லட்சத்தில் புதிய அரசு கட்டிடங்கள் திறப்பு!





திருப்பத்தூர், ஜூலை. 19–
திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ட்பட்ட சின்னசமுத்திரம் மற்றும் மாடப்பள்ளி ஊராட்சிகளில் ரூ.96.09 லட்சம்மதிப்பில் கட்டப்பட்ட மூன்று புதிய அரசு கட்டிடங்களை வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ரஞ்சித்குமார் திறந்து வைத்தார். இதில் ரூ.78.20 லட்சத்தில் கட்டப்பட்ட கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடமும், ரூ.17.89 லட்சத்தில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கான இரண்டு புதிய சமையலறை கட்டிடங்களும் அடங்கும். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிக்குமார், எம்.எல்.ஏ. டாக்டர் என்.திருப்பதி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

பின்னர் அமைச்சர், தமிழக அரசு மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். பொதுமக்கள் சாலை, குடிநீர், தெருவிளக்கு, பேருந்து வசதி, நிழற்குடை மற்றும் நியாயவிலைக் கடை உள்ளிட்ட கோரிக்கைகளை மனுக்களாக வழங்கினர். அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியருக்கு அமைச்சர் உத்தரவிட்டது டன், மனுக்களின் முன்னேற்றத்தை நேரில் ஆய்வு செய்ய மீண்டும் இப்பகுதிக்கு வருவதாக உறுதியளித்தார்.

# ஒட்டன்சத்திரத்தில் த.வெ.க பொதுச் செயலாளர் அமைச்சர் என்.ஆனந்த் பிறந்தநாள் விழா: டாக்டர் எம்.முத்து தலைமையில் ஆதரவற்றோருக்கு அரிசி பைகளை வழங்கினார்!



ஒட்டன்சத்திரம், ஜூலை 19–
தமிழக வெற்றிக் கழ கத்தின் தலைவரும், முதல மைச்சருமான சி.ஜோசப் விஜய். அவர்களின் போர் வாள் 62–வது பிறந்தநாள் விழா காணும் தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுசெயலாளர் மற்றும் ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் என்.ஆனந்த் பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் ஒட்டன்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர். கே.பி நல்லசாமி அறிவு றுத்தலின்படி ஒட்டன்சத்திரம் த.வெ.க பிரமுகர் டாக்டர் எம்.முத்து தலைமையில் ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த ஏழை எளியோர்கள் சுமார் 250 பயனாளிகளுக்கு விலையில்லா அரிசி பைகளை வழங்கி அமைச்சர் புஸ்ஸி என். ஆனந்த் நீண்ட ஆயுள் காலம் வாழ வேண்டுமென பிரார்த்தனை செய்து பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினார். இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் செல்வபாண்டி, சரவணன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் பிறந்தநாளை முன்னிட்டு தங்க மோதிரம் வழங்கப்பட்டது!

திருப்பூர், ஜூலை 19–
தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் திரு புஸ்ஸி ஆனந்த் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் குத்புதீன் ஏற்பாட்டில் அங்காளம்மன் கோவிலில் சிறப்பு அபிஷேக பூஜை மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது மற்றும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் 6 பிறந்த குழந்தைகளுக்கு 916 தங்க மோதிரம் பரிசாக வழங்கப்பட்டது மற்றும் விஜயாபுரத்தில் அன்னதானமும் 200க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவச சேவை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி நிறைவாக சிடிசி கார்னரில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது இந்த நிகழ்வில் மாவட்ட செயற்குழு சின்னதுரை தெற்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் சுப்பிரமணி இணை அமைப்பாளர் ஜெயராஜ் தெற்கு தொழிற்சங்கம் சீனிவாசன்பகுதி பகுதி செயலாளர்கள் அலாவுதீன் பிரவீன் ராஜேஷ் பாண்டியன் உசேன் காதர் உசேன் வில்லியம் ரகுமான் வார்டு செயலாளர்கள் ராபர்ட் அபு தாஹிர் பிரபு பிரபுராஜ் தனுஷ் கார்த்திக் மணிகண்டன் விக்னேஸ்வரன் தவ்பிக் அன்வர் நந்தகுமார் யாசர். அசார். பீர்முகமது. மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# வேலை வாய்ப்பு

## வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் 42 பணியிடங்கள்!

நிறுவனம்: வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal – ITAT)
அறிவிப்பு எண்: F.301–Ad(ATD)/DR/2026–27
வேலைவகை: மத்திய அரசு வேலை
பணிநியமனம்: நிரந்தர பணி
காலிப்பணியிடங்கள்: 42
பதவிகள்: சீனியர் பிரைவேட் செக்ரட்டரி, பிரைவேட் செக்ரட்டரி
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 18.07.2026
விண்ணப்பிக்க கடைசி தேதி: 16.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: http://itat.gov.in/

# ஜோஹோ AI கல்வித் தளம் அறிமுகம்... அரசு பள்ளிகளுக்கு இலவசம்!



புதுடெல்லி, ஜூலை. 19–
ஜோஹோ நிறுவனம், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்ப டையிலான ‘ஜோஹோ கிளாசஸ் 2.0’ என்ற புதிய கல்வித் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து அரசு பள்ளிகள், அரசு கல்லூரிகள் மற்றும் பல்க லைக்கழகங்களுக்கு இந்த தளம் இலவசமாக வழங்கப்படுகிறது.

தனியார் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மாதம் ரூ.500 கட்டணத்தில் பயன்படுத்தலாம். 100 மாணவர்கள் வரை தனிப்பட்ட வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுக்கு இது இலவசமாக வழங்கப்படும். 22 இந்திய மொழிகளில் செயல்படும் இந்த AI தளம், பாடங்கள், வினாடி வினா, அசைன்மென்ட் தயாரித்தல், மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட பல வசதிகளை வழங்குகிறது. ஆசிரியர்களின் பணிச்சுமையை குறைத்து, மாணவர்களுடன் அதிக நேரம் கலந்துரையாட உதவும் வகையில் இந்த தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# ₹2,000-க்கு மேல் UPI பரிவர்த்தனை... புதிய கட்டணமா?



புதுடெல்லி, ஜூலை. 19–
₹2,000–க்கு மேற்பட்ட UPI பரிவர்த்தனைகளுக்கு Mer–chant Discount Rate (MDR) கட்டணத்தை மீண்டும் அறிமுகப்படுத்த மத்திய அரசு ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கட்டணம் ஆண்டு வருவாய் ₹1.5 கோடிக்கு மேல் உள்ள பெரியவணிகர்களுக்கு மட்டுமே பொருந்தும். சிறு வணிகர்கள் மற்றும் பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. GPay, PhonePe, Paytm போன்ற செயலிகளை பயன்படுத்தும்வாடிக்கையாள ர்களிடம் எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது. கட்டணம் வணிகர்களிடம்தான் வசூலிக்கப்படும். இது அமல்படுத்தப்பட்டால், பரிவர்த்தனை மதிப்பில் அதிகபட்சம் 0.5% MDR விதிக்கப்படலாம்.

இந்த திட்டம் குறித்து அடுத்த ஒரு மாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## போலி பத்திரப்பதிவு மோசடியில் அனைவரும் கைது செய்யப்படுவார்கள் - அமைச்சர் நிர்மல்குமார்!



மதுரை, ஜூலை. 19–

மதுரையில் அமைச்சர் நிர்மல்குமார் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:–

மின்துறையில் ஒப்பந்த பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்து தற்போது எந்த உறுதியும் அளிக்க முடியாது. முதலில் எத்தனை ஒப்பந்த பணியாளர்கள் பணியில் உள்ளனர் என்பது குறித்து கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. அதன் பிறகு முடிவெடிக்கப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியில் பத்திர பதிவுத்துறையில் முறைகேடு நடந்துள்ளது. முந்தைய அமைச்சரின் காலத்தில் ஊழல் மலிந்திருந்தது. பழனி போலி பத்திரப்பதிவு மோசடி தொடர்பாக விரிவான விசாரணை நடைபெற்று வருகிறது. இதுபோன்ற மோசடி தமிழகத்தின் பல பகுதிக ளிலும் நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. கோவில் நிலங்கள் மட்டும ல்லாமல், நீர் நிலைகளையும் ஆக்கிரமித்து போலி பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கலாம். போலி பத்திரப்பதிவு மோசடி யில் சம்பந்தப்பட்ட அனை வரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பத்திரப்பதிவுத் துறை அலுவலர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இத்தகைய மோசடிகள் நடைபெற வாய்ப்பில்லை. அதிக புகார்கள் வருவதால் இதற்கென தனிப்பிரிவு அமைப்பது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடன் ஆலோசிக்கப்படும். போலி பத்திரப்பதிவு தொடர்பான ஆவணங்களை பொதுமக்கள் வழங்கினால் குற்றவியல் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சத்தமில்லாமல் மின் கட்டணம் உயர்வு: தி.மு.க. முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன்!



சென்னை, ஜூலை 19–

தி.மு.க. முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் முதலமைச்சராக பதவி ஏற்றதும் ஒரு உத்தரவு போட்டாரு. அது என்னவென்று தெரியுமா., 500 யூனிட்டிற்கு குறைவாக பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று தெரிவித்தார்.

கணக்கு போட்டு பார்த்தீர்களா எல்லோரும்., என்ன செய்திருக்காங்க. சத்தமில்லாமல் இன்று இரண்டு மடங்காக விலை ஏற்றப்பட்டிருக்கு. மின்சாரக் கட்டணம் ஏற்றப்பட்டிருக்கு. மு.க. ஸ்டாலின் ஆட்சியில் 100 யூனிட் குறைக்கப்பட்ட போது கட்டணம் எவ்வளவு இருந்தது. இப்போது எவ்வளவு இருந்தது என்று பாருங்கள்?. சத்தமில்லாமல் மின்சார கட்டணம் ஒரு யூனிட்டிற்கு இரண்டு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இன்று 4 ரூபாய் 50 பைசா உயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே, அவர்கள் எந்த அளவிற்கு பொய்யான செய்திகளை பரப்புகிறார்கள் என்ற அறிந்து கொள்ள முடியும். விலைவாசி ஏறுகிறது. எல்லா இடத்திலும் மின்வெட்டு தொடர்ச்சியாக இருக்கிறது. நிறைய இடத்துல யாரும் கேள்வி கேட்க முடியல. புகார் செய்ய முடியல. எதற்கு மின்தடை ஏற்படுகிறது என்பது தெரியல. தவெக ஆட்சிக்கு வந்தபிறகு மின்தடை என்பது சாதாரண ஒரு நிகழ்வாகி விட்டது.

பஞ்ச் டயலாக் ஆட்சிக்கு முடிவு கொடுக்கணும். வெறுமன வசனம் பேசி நடித்துவிட்டு மேடைல பேசிகிறாரு. அவ்வளவுதான்.

இவ்வாறு கீதா ஜீவன் பேசினார்.

## காவலரை தாக்கிவிட்டு தப்ப முயன்ற ரௌடி சுட்டுப் பிடிப்பு!

சென்னை, ஜூலை. 19–

குன்றத்தூர் அருகே திருமுடிவாக்கத்தில், தலைமைக் காவலரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பியோட முயன்ற 'ஏ பிளஸ்' (A+) ரௌடி கருப்பு என்ற தமிழ் அழகு என்பவரை போலீஸார் சுட்டுப் பிடித்தனர்.

சென்னை குன்றத்தூர் அருகே உள்ள தனியார் கல்லூரி திடலுக்குப் பின்புறம் ரௌடி கருப்பு என்பவர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வருவதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த நிலையில், தலைமைக் காவலர் விஜயகுமார் உள்ளிட்ட காவலர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

அப்போது, ரௌடி கருப்பு மற்றும் ஆகாஷ் ஆகிய இருவரும் நாட்டு வெடிகுண்டுகள் தயாரித்துக் கொண்டிருந்தது தெரியவந்தது. போலீஸார் சென்றதும், அவர்கள் நாட்டு வெடிகுண்டுகளை போலீஸார் மீது வீச முயற்சி செய்தனர். சுற்றி வளைக்க முயன்ற தலைமைக் காவலரை அரிவாளால் தாக்கிவிட்டு தப்ப முயன்றார் கருப்பு. இந்த நிலையில், தலைமைக் காவலர் ரௌடி கருப்புவின் கணுக்காலில் சுட்டார். இதனைத் தொடர்ந்து, கருப்பு கைது செய்யப்பட்டார். அரிவாள் வெட்டில் காயமடைந்த தலைமைக் காவலர் விஜயகுமார், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ரௌடி கருப்பு இருவரும் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர்.

## 'ஜனநாயகன்' ரிலீஸுக்கு அரசு விடுமுறையா? அதிமுக விமர்சனம்!

சென்னை, ஜூலை. 19–

மதுரையில் செய்தியா ளர்களைச் சந்தித்த அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்ததாவது:

ஜன நாயகன் பட வெளியீட்டு விழாவை, திருவிழாபோல கொண்டாட வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்து இருக்கும் அமைச்சர் ஆனந்த், அடுத்த அதிரடி அறிவிப்பாக ஜன நாயகன் திரைப்படம் வெளியிடுகிற நாளில், அரசு விடுமுறையை அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை'' என்றார்.

## தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க அதிக அழுத்தம்: கர்நாடக முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார்!



கர்நாடகா, ஜூலை. 19–

பெங்களூரு விதானசவுதாவில் முதல்–மந்திரி டி.கே. சிவக்குமார் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது:– கர்நாடக மந்திரிசபை கூட்டம் கடந்த 16–ந்தேதி நடைபெற இருந்தது. அன்றைய தினம் நான் டெல்லியில் இருந்ததால் மந்திரிசபை கூட்டம் நடைபெறவில்லை. இதனால் நாளை (அதாவது இன்று) மதியம் 3 மணிக்கு அவசர மந்திரிசபை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மந்திரிசபை கூட்டத்தில் மாநிலத்தில் நிலவும் வறட்சி குறித்தும், இந்த விவகாரத்தில் அடுத்தகட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக ஆலோசிக்க உள்ளோம். வறட்சி குறித்து மந்திரிசபை மற்றும் மாவட்ட கலெக்டர்களுடன் ஆலோசிக்கப்படும். மாவட்டங்களுக்கு சென்று ஆய்வு நடத்தப்படும். அதன்பிறகு, மத்திய அரசுடன், மாநிலத்தில் நிலவும் வறட்சி குறித்து தெரிவிக்கப்படும். மாநிலத்தில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு இதுவரை எந்த கடிதமும் எழுதவில்லை. மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் வறட்சி உள்ளது. வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மத்திய அரசுக்கு தெரிவிக்கப்படும்.

தற்போது மாநிலத்தில் உள்ள அணைகளில் இருப்பு இருக்கும் தண்ணீரை, குடிநீருக்கு மட்டும் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரும், குடிநீர் தேவைக்காக மட்டுமே ஆகும். இப்போதும் சொல்கிறேன், விவசாயத்துக்கு தண்ணீரை பயன்படுத்த வேண்டாம். விவசாய தேவைக்காக அணைகளில் எவ்வளவு தண்ணீர் உள்ளது என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதற்கு முன்பாக அரசுக்கு விவசாயிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். குடிநீருக்காக தான் அணைகளில் தண்ணீர் திறந்து வருகிறோம். காவிரியில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடும்படி அதிக அழுத்தம் இருக்கிறது. துங்க பத்ரா அணையில் இருந்து தண்ணீர் திறக்க அழுத்தம் இருக்கிறது. அணைகள் நிரம்பினால் தண்ணீர் கொடுப்போம். அப்போது எந்த தொந்தரவும் ஏற்படாது. காவிரி நதிநீர் விவகாரம்பற்றி பேச விரும்பவில்லை. அதுபற்றி நிறைய பிரச்சினை இருக்கிறது. அதனால் காவிரி நதிநீர் குறித்து விவாதிக்க விரும்பவில்லை. காவிரி நீர் நமது உரிமை. மேகதாது விவகாரம் குறித்து சுப்ரீம் கோர்ட்டு கூட தீர்ப்பு கூறியுள்ளது. மேகதாதுவில் அணை கட்டுவதால் தமிழ்நாட்டுக்குதான் உதவியாக இருக்கும் என்பதை மீண்டும் சொல்லி கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## ஃபிஃபா உலகக்கோப்பை: பிரான்ஸை வீழ்த்தி 3-ம் இடத்தைப் பிடித்த இங்கிலாந்து!




ஃபிஃபா உலகக்கோப்பை கால்பந்து தொடர் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டீனா – ஸ்பெயின் அணிகள் தகுதிபெற்றுள்ளதைத் தொடர்ந்து அப்போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாக, நேற்று இரவு 3–ம் இடத்துக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில், அரையிறுதிப் போட்டிகளில் தோற்ற பிரான்ஸ் – இங்கிலாந்து அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கியது முதல் பிரான்ஸின் தடுப்பாட்டத்தை இங்கிலாந்து எளிதாகக் கையாண்டது. முதல் 2 நிமிடங்களிலேயே இங்கிலாந்தின் டெக்லான் ரைஸ் அந்த அணிக்கான கோல் கணக்கைத் தொடங்கி வைத்தார். 18–வது நிமிடத்தில் எஸ்ரி கோன்சா இரண்டாவது கோலை அடித்தார்.

இதனைத் தொடர்ந்து, ஆட்டத்தின் 36வது நிமிடத்தில் புகாயோ சாகா ஒரு அசாத்தியமான கோலை அடித்து கணக்கை 3–ஆக உயர்த்தினார். அடுத்து மீண்டும் 45+1 நிமிடத்தில் புகாயோ சாகா அடித்த கோல் மூலம் முதல் பாதியில் இங்கிலாந்து அணி 4 – 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியில் பிரான்ஸ் அணி புது உத்வேகத்தைப் பெற்று ஆட்டத்தை மாற்ற முனைந்தது. 48–வது நிமிடத்தில் எம்பாப்பே அடித்த கோல் மூலம் தனது கோல் கணக்கை பிரான்ஸ் தொடங்கியது. பின்னர், 54–வது நிமிடத்தில் எம்பாப்பே உதவியுடன் பிராட்லி பார்கோலா அடுத்த கோலை அடித்தார். தொடர்ந்து, 66–வது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோல் அடித்தார் எம்பாப்பே. பிரான்ஸ் அணி கோல் கணக்கை சமன் செய்ய முயற்சித்த நிலையில், ஆட்டத்தின் 87–வது நிமிடத்தில் கிடைத்த முக்கியமான பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கோல் அடித்தார் இங்கிலாந்து வீரர் சாகா. அதன்மூலம் தனது ஹாட்ரிக் கோல்களை அடித்து இங்கிலாந்தை ஆசுவாசப்படுத்தினார், ஆனாலும், பிரான்ஸ் விடுவதாக இல்லை. 90+6 வது நிமிடத்தில் டெம்பேலே ஒரு கோல் அடித்தார். இதனால், 5 – 4 என்ற கணக்கில் பிரான்ஸ் முன்னேறி வந்தது. ஆனால், சில நிமிடங்களில் (90+8) இங்கிலாந்தின் ஜூட் பெல்லிங்ஹாம் அடித்த கோல் மூலம் 6–4 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

இதன்மூலம், பிஃபா உலகக்கோப்பை கால்பந்து தொடர் 2026–ல் மூன்றாவது இடத்தை இங்கிலாந்து அணி பிடித்தது. இங்கிலாந்து அணி 1966 ஆம் ஆண்டு உலகக்கோப்பை வென்ற பின்னர் அந்த அணி பெற்றுள்ள சிறந்த இடம் இதுவே.

தோல்வியடைந்த போதும், ஃபிஃபா உலகக் கோப்பை வரலாற்றில் 22 கோல்கள் அடித்து அதிக கோல் அடித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் கிலியன் எம்பாப்பே.

## இணையத்தில் வைரலாகும் மத்திய அரசின் 'ஃபேஸ் வாஷ்': மிகக் குறைந்த விலை-எவ்வளவு தெரியுமா?




புதுடெல்லி, ஜூலை. 19–

சமூக வலைத்தளங்களில் தற்போது ஒரு புதிய அழகு சாதனப் பொருள் இந்திய அளவில் பெரும் விவாதத்தையும் வரவேற்பையும் பெற்று வருகிறது. அது வேறு எந்த ஒரு முன்னணி நிறுவனத்தின் தயாரிப்பும் அல்ல. இந்திய மத்திய அரசின் ஜன அவுஷதி கேந்திராக்களில் விற்பனை செய்யப்படும் 'சாலிசிலிக் ஆசிட் ஃபேஸ் வாஷ்' தான் அது. மிகக் குறைந்த விலையில், முகப்பருக்களைக் கட்டுப்படுத்தும் அசாத்தியமான நன்மைகளை வழங்குவதால், இளைஞர்கள் மற்றும் ஸ்கின்கேர் பிரியர்கள் மத்தியில் இந்த தயாரிப்பு காட்டுத்தீ போல பரவி வருகிறது.

**வைரலாவதற்கான முக்கிய காரணங்கள் என்ன?**

சந்தையில் முன்னணி பிராண்டுகளின் சாலிசிலிக் ஆசிட் ஃபேஸ் வாஷ்கள் பொதுவாக ரூ.150 முதல் ரூ.500 வரை விற்கப்படுகின்றன. ஆனால், மத்திய அரசின் பிரதான் மந்திரி பாரதிய ஜனவுஷதி பரியோஜனா திட்டத்தின் கீழ், இதன் 1% வேரியண்ட் ரூ.46.88–க்கும், 2% வேரியண்ட் ரூ.65.63–க்கும் மட்டுமே கிடைக்கிறது. இது சந்தை விலையை விட கிட்டத்தட்ட 70% முதல் 90% வரை குறைவாகும்.

**தரத்திற்கு உத்தரவாதம்:**

குறைந்த விலை என்றதும் தரம் குறைவாக இருக்குமோ என்ற ஐயம் தேவையில்லை. இந்த தயாரிப்புகள் அனைத்தும் WHO–GMP மற்றும் NABL அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களால் சான்றளிக்கப்பட்டு, கடுமையான தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே சந்தைக்கு வருகின்றன.

**முகப்பரு மற்றும் எண்ணெய் பசையுள்ள சருமத்திற்கு தீர்வு:**

சாலிசிலிக் ஆசிட் என்பது சரும துவாரங்களில் உள்ள அழுக்குகள் மற்றும் அதிகப்படியான எண்ணெய் பசையை நீக்கி, முகப்பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் வராமல் தடுப்பதில் மிகச்சிறந்த மருத்துவக் காரணியாகக் கருதப்படுகிறது.

**ஸ்கின்கேர் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம்:**

நெட்டிசன்கள் பலரும் தங்களது எக்ஸ் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில், "இனி தேவையின்றி விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம், அரசாங்கத்தின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது" எனப் பதிவிட்டு வருகின்றனர். மருத்துவ ரீதியாக பரிந்துரைக்கப்படும் இந்த ஃபேஸ் வாஷ், நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களுக்கும் தரமான சருமப் பராமரிப்பு கிடைக்க வழிவகை செய்துள்ளது.

இது சாலிசிலிக் ஆசிட் கொண்ட ஒரு மருத்துவத் தயாரிப்பு என்பதால், உணர்திறன் மிக்க சருமம் உள்ளவர்கள் அல்லது முதன்முறையாகப் பயன்படுத்துபவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அல்லது 'பேட்ச் டெஸ்ட்' செய்து பார்ப்பது நல்லது.

**எங்கு வாங்குவது?**

இந்த ஃபேஸ் வாஷை உங்கள் பகுதிக்கு அருகில் உள்ள ஜன அவுஷதி கேந்திராக்களில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு அருகிலுள்ள கடையைக் கண்டறிய Janaushadhi Official Website மற்றும் https://janaushadhi.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள "Locate Kendra" பக்கத்தைப் பயன்படுத்தலாம்.

மக்களுக்கு மலிவு விலையில் மருந்துகளை வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட ஜன அவுஷதி கேந்திராக்கள், தற்போது சாலிசிலிக் ஆசிட் ஃபேஸ் வாஷ், புரோட்டீன் பவுடர்கள் மற்றும் ஐசோட்ரெட்டினாயின் கேப்சூல்கள் போன்ற நவீன சுகாதார மற்றும் அழகுப் பராமரிப்புத் துறையிலும் தடம் பதித்து வருவது குறிப்பிடத்தக்கது.



திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி கோடை விழா–2026–ஐ வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ரஞ்சித்குமார் தொடங்கி வைத்தார். பல்வேறு அரசுத் துறைகளின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்ட அவர், ஏலகிரியை முன்னணி சுற்றுலாத் தலமாக மேம்படுத்த தேவையான நிதியை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். விழாவில் பரதநாட்டியம், நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள், சிலம்பம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிறைவு நாளில் நாய்கள் கண்காட்சி, பட்டிமன்றம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கைது செய்ய விரும்புகிறேன்- மம்தானி தடாலடி!



அமெரிக்கா, ஜூலை. 19–

அமெரிக்காவின் நியூயார்க்கில் வரும் செப்டம்பர் மாதத்தில் ஐ.நா. உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இந்த உச்சி மாநாட்டில் 193 ஐ.நா. உறுப்பு நாடுகள் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது இந்த மாநாட்டிற்கு வருகை தரும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கைது செய்யப்பட ஆலோசகர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக நியூயார்க் மேயர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "பிரதமர் நெதன்யாகு, ஹக்கில் (Hague) உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியவர் என்று நான் நம்புகிறேன்.

அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட ஒரு போர்க் குற்றவாளி. கடந்த பல ஆண்டுகளாக அவருடைய செயல்பாடுகள் ஏற்படுத்திய விளைவுகளின் காரணமாக, இந்த கருத்து பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு வெளிநாட்டு பிரதமரை கைது செய்ய உத்தரவிடும் அதிகாரம் தனக்கு உள்ளதா என்பது உறுதியாக தெரியவில்லை. ஆனால் நியூயார்க் சட்டம் என்ன செய்ய அனுமதிக்கிறதோ, அதை நாங்கள் செய்வோம்'' என்று கூறினார்.

மேலும் அமெரிக்காவில் மேயர் பதவிக்கான தேர்தல் பிரச்சாரத்தின்போது, நெதன்யாகுவை கைது செய்வதாகவும் மம்தானி உறுதியளித்தார்.

இதையடுத்து அமெரிக்க மேயரின் கருத்துக்களுக்கு இஸ்ரேல் கடுமையான எதிர்வினையை பதிவு செய்துள்ளது. இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலின் தூதர் டானி டானன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மேயராக தனது பொறுப்புகளில் கவனம் செலுத்தி, தனது நகரத்தில் அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு அலையை எதிர்கொள்வதற்கு பதிலாக, அவர் இஸ்ரேல் அரசை தாக்குவதன் மூலம், விரோதத்தை தூண்டி, தலைப்புச் செய்திகளை உருவாக்க முயற்சிக்கிறார். இதனால் எதுவும் மாறப்போவதில்லை.

இஸ்ரேல் பிரதமர் நியூயார்க்கிற்கு வந்து, ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றி, இஸ்ரேலின் உண்மையையும் தன் குடிமக்களை பாதுகாப்பதற்கான அசைக்க முடியாத உரிமையையும் உலகத்தின் முன் எடுத்துரைப்பார்.

மேலும் யாராவது கைது செய்யப்பட வேண்டும் என்றால், அது நியூயார் மேயர் உங்களை தான்'' என்று அவர் பதிவிட்டுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020